செய்தி வெளியீட்டு எண்.688 நாள். – 26.10.2007

# செய்தி வெளியீடு

## தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி அருகே 1600 மெ.வா. திறனுள்ள புதிய மின் உற்பத்தி நிலையம் அமைகிறது

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்–மத்திய அமைச்சர் திரு சந்தோஷ் மோகன்தேவ் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

அதிகரித்து வரும் மின் தேவையை ஈடுகட்டுவதற்கு, தமிழ்நாடு மின்சார வாரியம், பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து ஒவ்வொன்றும் 800 மெ.வாட் திறனுடைய இரண்டு அலகுகள் கொண்ட 1600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் புதிய மின் உற்பத்தி நிலையத்தைத் தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி கிராமத்தில் நிறுவிட திட்டமிட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி, மத்திய அரசின் மாண்புமிகு கனரகத் தொழில்கள் மற்றும் பொதுத் துறை அமைச்சர் திரு. சந்தோஷ் மோகன்தேவ், மாண்புமிகு தமிழக மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் பாரத மிகுமின் நிறுவனத்திற்கும் இடையில் இப்புதிய திட்டத்தைச் செயல்படுத்தவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று (26.10.2007) தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது. இவ்வொப்பந்தத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, பாரத மிகுமின் நிறுவனத்தின் தலைவர் திரு. அசோக் கே. பூரி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

. இந்தியாவில் 210 மெகாவாட் திறனுள்ள மின் உற்பத்தி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டில் தூத்துக்குடியில்தான் முதன் முதலாகத் தமிழ்நாடு மின்சார வாரியம் மேம்பட்ட உற்பத்தித் திறனுடைய உயர்தொழில்நுட்பத்தை மின் உற்பத்தியில் கையாளத் தொடங்கியது. அதேபோன்று, தற்போது தமிழ்நாடு மின்சார வாரியம் உயர் நுண்திறன் தொழில்நுட்பம் (Super Critical Technology) கொண்ட 800 மெகாவாட்

**திறனுடைய மின் உற்பத்தித் திட்டத்தை முதன் முதலாக நிறுவ உள்ளது. இத்திட்டத்தில் உயர் நுண்திறன் தொழில்நுட்பம் (**Super Critical Technology) **பயனபடுத்தப்படுவதால் குறைந்த அளவில் கரி பயன்படுத்தப்படும்**; **நிலத்தேவையும் குறையும்**; **காற்று மாசுபடுதலும் குறைந்து, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும்**; **தூய்மை மேம்பாட்டு இயக்க அமைப்பின் (**Clearn Development Mechanism) **கீழ் இத்திட்டத்திற்குக் கரிப்பொருள் சேமிப்பு (**Carbon Credit) **வசதியும் கிடைக்கும். அனைத்து வகையிலும் சிறப்பு வாய்ந்த இத்திட்டம் 2011 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும்.**

**இத்திட்டம் உடன்குடி கிராமத்தில் 938 ஏக்கர் பரப்புள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் அமையும். கடற்கரையை ஒட்டியே இத்திட்டம் அமையவுள்ளதால், இதன் அருகிலேயே நிலக்கரியைக் கையாளுவதற்குத் தேவையான துறைமுகம் (**Jetty) **ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான குளிர்நீர் கடலிலிருந்தும், பதனிடாத நீர் கடல் நீரை நன்னீராக்கும் நிலையத்தின் மூலமும் பெறப்படும்.**

**இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஆர். சதபதி, தொழில் துறைச் செயலாளர் திரு. ஏ. சக்திகாந்ததாஸ், நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், மத்திய அரசின் கனரகத் தொழில்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் செயலாளர் திரு. ஆர்.சி. பாண்டா, இணைச் செயலாளர் திரு. சுரேஷ் சந்திர மித்ரா, பாரத மிகு மின் நிறுவனத்தின் இயக்குநர் திரு. கே. ரவிகுமார், செயலாண்மை இயக்குநர் திரு. இ. மீனாட்சி சுந்தரம், தமிழ்நாடு மின்சாரவாரிய உறுப்பினர்கள் திரு. கதிரேசன், திரு. கே. கோவிந்தராஜ், திரு. வி.என். விவேகானந்த மூர்த்தி, செயல் இயக்குநர் திரு. என். சசிகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**